எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No: 26 Issue No: 7 Bro.P.D.ஞானப்பிரகாசம் April - 2024

**ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :**

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*

*ஏசாயா 60:22*

**2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :**

**"உங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை நீங்கள் துரத்துவீர்கள்."** உபாகமம் 11:23.

**"இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது."**

யோபு 42:5



தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

## ஏப்ரல் மாத வாக்குத்தத்தம் : 2024

**“நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்.”** I கொரி. 2:10

ஏப்ரல் மாத எச்சரிப்பின் வசனம்: **“நீங்கள் பெற்றுக்கொள்ளதக்கதாக ஓடுங்கள்”** I கொரி.9:24

### உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஐக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், கர்த்தர் நம்மோடு கூட இருந்து தமது நல்ல ஆவியை அளவில்லாமல் நமக்குத் தந்து நாம் அறியாத சத்தியங்களை நமக்கு விளக்கிக் காட்டுவார். நம் மூலமாய் நடைபெறும் ஊழியங்கள் இதுவரை இல்லாத மகிமையான ஊழியமாக மாறும். தேவனுடைய ஆவி மாம்சமான யாவர் மேலும் பலமாக இறங்க வேண்டும் என்று கருத்துடன் ஜெபித்துக்கொண்டே இருப்போம். இந்த மாதத்தில் வரும் கடினமான சோதனை எல்லாம் ஆவியின் பலத்தினால் இலகுவாய் மாறிவிடும்.

தேவன் நம்முடைய தேசத்தின் மேல் இறங்கி நடைபெறயிருக்கின்ற பாராளுமன்ற தேர்தலில் ஆண்டவர் சித்தத்தை நிறைவேற்ற ஊக்கமாக நாம் ஜெபிப்போம். தேர்தல் அமைதியாக நடைபெறவும், தேவனுக்குச் சித்தமானவர்கள் ஆட்சி அமைக்கவும், இதனால் தேசம் முழுவதும் சுவிசேஷம் செல்லும் வாய்ப்பை தேவன் கொடுக்கவும் நாம் ஜெபிக்க வேண்டும். இதுவரை நம் ஜெபங்களுக்கு பதில் கொடுத்த ஆண்டவர் இன்னும் விசேஷித்த பதிலைத் தந்து நடத்துவார். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் அனைத்து ஊழியங்களும் அதனதன் காலத்தில் நடைபெறும். மேலும் மே மாதம் 2,3,4 ஆகிய தேதிகளில் சுரண்டையில் உள்ள நமது ஜெபக்கூடாரத்தில் வைத்து 45வது ஆண்கள் தியான முகாம் ஆசீர்வாதமாக நடைபெற உள்ளது. ஆண்கள் ஜெபத்துடன் கலந்து கொள்ளவும் தேவன் கிரியை செய்யவும் ஜெபியுங்கள். ஆண்கள் மத்தியில் ஒரு எழுப்புதல் உண்டாக வேண்டும். இதற்கு இடையூறாக தடைகளைக் கொண்டு வரும் பிசாசினுடைய தந்திரங்கள் யாவும் செயல்படாமல் இருக்க கருத்துடன் ஜெபிப்போம். ஆண்கள் மத்தியில் ஒரு ஞான எழுப்புதல் வர வேண்டும் என்பது நம் ஐக்கிய பாரமாகும். அது விரைவில் நிறைவேற வேண்டும். உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கும் பணியை ஆண்கள் துரிதமாக செய்ய தேவன் தேசமெங்கும் ஊழியர்களை எழுப்பப் போகிறார். இன்னும் அநேகர் ஐக்கியத்தின் மூலம் தேவபணியைச் செய்யும் நாட்களையும் நாம் காணவுள்ளோம். இப்பத்திரிக்கையில் உள்ள ஜெபக்குறிப்புகளுக்காகவும் அனுதினமும் கருத்துடன் ஜெபிப்போம். ஐக்கியத்தின் மூலமாக நீங்கள் பெற்றுக் வருகின்ற ஆசீர்வாதங்களை சாட்சியாக எழுதுங்கள். ஐக்கிய தொடர்பு குறைந்து விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பிரச்சனைகளை குறித்து கலங்கவேண்டாம் சிவந்த சமுத்திரத்தை இரண்டாக பிளந்து வழிநடத்தின ஆண்டவர் தமது வல்லமையை இன்னும் விளங்க செய்ய சித்தமாய் இருக்கிறார். நம் ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர்கள் வெளிநாடுகளிலும் சிலர் இருக்கின்றார்கள். அவர்களும் தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சியடைய வேண்டும். நம்முடைய குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட்டு ஆவியின் அபிஷேகம் பெற வேண்டும். பெந்தெகொஸ்தே நாளின் அனுபவங்கள் நம் ஐக்கியத்தில் இன்னும் அதிகமாக நிறைந்து இருக்க வேண்டும். ஆவியானவர் ஐக்கியத்தை தொடர்ந்து நடத்தும்படி ஜெபிக்க வேண்டும். அப்.2:1-4 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள தேவக்கிரியைகள் தினசரி நடக்கும்படியாகவும், குறிப்பாக சுரண்டையிலும், சுற்றுவட்டாரங்களிலும் அபிஷேகம் பெற்ற ஊழியர்களை தேவன் திரளாய் எழுப்பவும் ஜெபியுங்கள். ஐக்கிய ஜெபங்கள் உங்களுக்கு எப்பொழுதும் உண்டு.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.

கிறிஸ்துவின் பணியில்,
**P.துரைசிங் ஞானப்பிரகாசம்,**
ஆசிரியர், Cell: 90255 53614

**வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.**

**STATE BANK A/c.No**
Branch : **Surandai**
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**
3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**
3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay
+919942950132

தொடர்புக்கு: சகோ. **P.D.ஞானப்பிரகாசம்** Cell: 90255 53614 | சகோதரி. **S.சந்திரா ஞானப்பிரகாசம்** Cell: 99653 36459 | சகோ. **D.ஜோயல்** Cell: 99429 50132

தேவ செய்தி

## "இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது" யோபு 42:5

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, யோபுவின் வாழ்க்கையை குறித்து தியானிப்போம். ஆண்டவரை குறித்து காதினால் கேள்விப்பட்ட யோபு படிப்படியாக வளர்ந்து இப்பொழுது ஆண்டவரை என் கண்களால் காண்கிறேன் என்று கூறக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய வளர்ச்சியை யோபு கண்டடைந்தார். நாமும் இப்படிப்பட்ட வளர்ச்சியையும் இதற்கு மேலான வளர்ச்சியையும் காண வேண்டும். அதற்குரிய சத்தியங்களை தொடர்ந்து தியானிப்போம்.

### I தேவனால் நற்சாட்சி பெற்ற யோபு: யோபு42:7

யோபுவின் வளர்ச்சியைக் குறித்து ஆண்டவர் இவ்விதமாய் கூறுகிறார். என் தாசனாகிய யோபு பேசினது போல நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை. யோபுவின் சிநேகிதர்கள் தேவனுக்கு பிரியமில்லாத அநேக வார்த்தைகளை பேசினார்கள். ஆனால் யோபு அவர்களை போல பேசாமல் நிதானமான ஆவிக்குரிய வார்த்தைகளை பேசினார் என்று ஆண்டவரே சாட்சி கூறினார். அப்படி என்ன வார்த்தையை யோபு பேசினார் என்று பார்க்கும் போது, யோபு தன்னுடைய வாழ்வில் காணப்பட்ட சில சில குறைகளை நன்றாக உணர்ந்து தன்னை அருவருத்து தூளிலும், சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்று கூறியதாக யோபு 42:6ல் வாசிக்கிறோம்.

அன்பானவர்களே விசுவாச ஜீவியம் என்பது நன்கு பக்குவப்பட்ட நிலைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. யோபு குறைகளுக்காக மனஸ்தாபப்பட்டது ஆண்டவருடைய பார்வையில் உகந்த காரியமாய் காணப்பட்டது. இதைபோல ஊழியர்களும், விசுவாசிகளுமாகிய நாம் அனைவரும் சிறு சிறு தவறுகளுக்கும் கூட மனஸ்தாபப்படுவது நல்லது. மனஸ்தாபப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கர்த்தரால் நிச்சயம் உயர்த்தப்படுவார்கள். நாம் தவறுகள் செய்து விட்டு அதற்கு மனஸ்தாபப்படாமல் நம்முடைய இருதயத்தை கடினமாக்குவோமானால் வளர்ச்சியடையாத வாழ்க்கையாகவே காணப்படுவோம். நாம் பேசும் வார்த்தைகள் அனைத்தும் தேவனுக்கு உகந்ததாய் இருக்க வேண்டும். அப்போது தான் தேவன் நம்மை குறித்து சாட்சி கொடுப்பார். இந்த கடைசி நாட்களில் நாம் நம்முடைய ஊழியத்திலும், விசுவாசத்திலும் வளர்ச்சியடைய இன்னும் அதிகமாக ஜெபித்து, வேதத்தை வாசித்து அதன்படி நடக்க வேண்டும். அதுமட்டுமல்ல தேவன் என்னை குறித்து என்ன சாட்சிக் கொடுக்கிறார் என்பதையும் நன்கு உணர்ந்துக் கொள்ள வேண்டும். நம் குறைகளை சரி செய்வோம்.

### II தேவன் மீது விசுவாசம் வைத்த யோபு: யோபு 42:2

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். யோபுவிடம் காணப்பட்ட விசுவாசம் வளர்ச்சியடைந்து தேவனை தன்னுடைய கண்களால் காணக்கூடிய அளவிற்கு உயர்ந்து விட்டது. யோபுவின் பொறுமையும், கடந்து வந்த பாதையில் காணப்பட்ட விசுவாசமும், வளர்ச்சியை கொண்டு வந்தது. இப்படிப்பட்ட விசுவாச வளர்ச்சி நமக்கு இன்னும் தேவை. நம்முடைய ஊழியமும், நம்முடைய குடும்பத்தார் அனைவரும் இன்னும் அதிகமாக வளர்ச்சியடைய தேவன் உதவி செய்வார். அது எந்த சூழ்நிலையில் இருந்தாலும் இன்னும் அதிகமாக வேதம் வாசித்து ஜெபிக்கும் போது நல்ல விசுவாச வளர்ச்சியை பெற்றுக் கொள்ள முடியும். எவ்விதமான தடைகள் வந்தாலும் அதைத் தாங்கவும், தாண்டிச் செல்லவும் தேவன் கிருபை செய்வார்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த காலத்தில் கர்த்தரால் நாம் பயன்பட வேண்டும். கர்த்தர் நமக்கு உணர்த்துகின்ற திட்டங்களை நன்றாக விசுவாசித்து அதை செயல்படுத்த வேண்டும். ஆண்டவருடைய கிருபையினால் நான் பணிசெய்த நாட்களில் ஆசிரியர் பணியோடு, சபை ஊழியத்தையும் சேர்த்து செய்ய வேண்டும் என்று நிர்வாகம் கூறியது. நான் அதற்கு மனப்பூர்வமாக சம்மதித்து அந்த சபை ஊழியத்தையும் செய்வதற்கு ஏற்ற பெலனையும் கர்த்தர் தந்தார். இதனால் அநேக ஆத்துமாக்கள் விசுவாசத்தில் வளர்ச்சி பெற்றார்கள். என்னுடைய விசுவாசமும், அந்த நாட்களிலே பெருகவும் கர்த்தர் கிருபை செய்தார். யோபுவைப்போல கண்ணால் காணக்கூடிய ஆவிக்குரிய தரத்தையும் தேவன் கட்டளையிட்டார். இதைப்போல தேவன் எப்படியெல்லாம் நம்மை நடத்துகிறாரோ அதற்கு கீழ்ப்படிந்து செயல்படுவோமானால் யோபுவின் விசுவாசம் வளர்ச்சி நம்மிலும் காணப்படும். இந்த நாட்களில் விசுவாசிகளாகிய நமக்கு வரக்கூடிய சோதனைகளும், பாரங்களும், பாடுகளும் அதிகமாய் இருக்கின்றபடியினால் விசுவாசத்தில் நாம் தளர்ச்சியடையாமல் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போது ஆண்டவரை குறித்து காதால் கேள்விப்பட்ட நாம் கண்களால் காணக்கூடிய உயர்ந்த நிலைக்கு கர்த்தர் நம்மை கொண்டு வருவார். எப்போதாவது அல்ல எப்பொழுதும் தேவனோடு பேசும் ஒரு பாக்கியம் நமக்கு கிடைக்கும். இந்தக் காலங்களை நாம் வீணாக்கி விடாதபடி தேவனுடைய காரியங்களில் இன்னும் அதிகமாக ஈடுபடுவோம். தேவையற்ற பாரங்களை நம்மை விட்டு விலக்குவோம். நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவராய் இருந்து இதிலும் சிறப்பான வழிமுறைகளை நமக்கு காண்பித்து நடத்துவார்.

### III தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்த யோபு: யோபு 42:10

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் என்று யோபு 42:10ல் நாம் வாசிக்கின்றோம். தன் சிநேகிதருக்காக யோபு ஜெபித்தது அவருக்கு ஒரு பெரிய விசுவாச வளர்ச்சியைக் கொண்டு வந்தது. பல கஷ்டங்கள் மத்தியில் அவர் வாழ்ந்த நாட்களில் தன் சிநேகிதருக்காகவும் ஜெபிக்கும் ஒரு நல்ல எண்ணத்தையும் தேவன் கட்டளையிட்டார். அவ்விதமாக அவர் ஜெபிக்கும் போது அதுவரை ஆண்டவரை காதால் கேள்விப்பட்டவர் கண்களினால் பார்க்கும் கிருபையையும் பெற்றுக் கொண்டார்.

இந்த சத்தியத்தை நாம் இன்னும் அதிகமாக செயல்படுத்த வேண்டும். நம்முடைய குடும்பங்களுக்காக, நமக்காக மாத்திரம் இன்னும் ஜெபித்துக் கொண்டிராமல் நம்மை விட பாடுகள் உள்ள ஜனங்களுக்காக நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்போது அவர்களுக்கும் விடுதலை கிடைக்கும். ஜெபிக்கும் நமக்கும் ஆவிக்குரிய எழுச்சி உண்டாகும். தினமும் நம்முடைய ஜெப ஐக்கியத்தில் பல்வேறு பிரச்சனைக்காக ஜெபிக்க வருகிறவர்கள் உண்டு. அவர்களுக்காக நாம் பாரத்தோடு ஜெபிக்கும் போது தேவன் மனமிரங்கி அவர்களுடைய அனைத்து கஷ்டங்களையும் கர்த்தர் மாற்றி அவர்களை வழிநடத்துவதை அனுதினமும் காண முடிகின்றது.

நீங்களும் உங்களுக்காக மாத்திரம் ஜெபிக்கிறவர்களாக இராமல் தேசத்திற்காக, திருச்சபைகளுக்காக, தேசம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களுக்காக, தேசத்தை நிர்வாகம் செய்யும் தேசத்தலைவர்களுக்காகவும் இன்னும் அதிகமாக போராடி ஜெபிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு நீங்கள் ஜெபித்தால் உங்கள் ஜெபங்கள் கேட்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் விசுவாசம் விருத்தியடைவதை காணமுடியும். அதுமட்டுமல்ல ஆண்டவரை காதால் கேட்ட நீங்கள் கண்களால் பார்க்கும் மேலான அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளுவீர்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாளுக்கு நாள் வளர்ச்சியடைவது நம்முடைய விசேஷித்த பாரமாய் இருக்க வேண்டும். ஆண்டவர் அதை அதிகமாக விரும்புவார். எல்லாரையும் உயர்த்த வேண்டும் என்பது தேவ சித்தமாகும். அந்த சித்தம் நம்மிலும் நிறைவேற வேண்டும். இந்த செய்தியை வாசித்த பின்பு நம் எல்லாருடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஒரு நல்ல முதிர்ச்சியை தேவன் கட்டளையிடப் போகின்றார். நாம் அவிசுவாசப்பட்டு விடாதபடி விசுவாசத்திலே நிலைத்திருப்போம். நம் ஒவ்வொருவரைக் கொண்டும் நாம் இருக்கும் பகுதிகளில் தேவன் செய்யும் காரியங்கள் பயங்கரமாய் இருக்கும். இதுவரை ஆண்டவரை அறியாதவர்கள் கூட மிக உற்சாகமாக ஆண்டவரை ஏற்றுக்கொள்வார்கள். இந்த கிருபையையும் தேவன் நமக்குத் தந்து வழிநடத்துவார்.

### IV தன் குடும்பத்தாரை அன்போடு ஏற்றுக்கொண்ட யோபு: யோபு 42:11

அப்பொழுது அவனுடைய எல்லா சகோதரரும், சகோதரிகளும் முன் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவரிடத்தில் வந்து அவன் வீட்டிலே அவனோடே போஜனம் பண்ணி, கர்த்தர் அவன் மேல் வரப்பண்ணின சகல தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து, அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு தங்க காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள் யோபு 42:11. மேலே கண்ட இந்த வசனத்தின் விளக்கம் என்னவென்றால். யோபுவுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் தேவன் ஏற்படுத்தி வைத்த குடும்ப ஐக்கியமேயாகும். யோபு கண்களினால் ஆண்டவரை கண்டபடியினால் அவரைவிட்டு விலகிப் போன குடும்பத்தார் மீண்டும் அவரை சந்திக்க வரும்போது மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். இதுவும் ஒரு சிறப்பான வளர்ச்சியாகும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்களில் பிசாசானவன் அநேக வீடுகளிலும் உட்புகுந்து குறிப்பாக ஊழியர்கள், விசுவாசிகள் குடும்பங்களில் குழப்பங்களை உருவாக்கி வருவதை பார்க்கின்றோம், அனுபவித்திருக்கின்றோம். இதை எப்படி மேற்கொள்ளலாம் என்றால் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை வைத்து தான் குடும்பங்களை கட்டி எழுப்ப முடியும். இதற்காக நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும். குடும்பத்தார் யாரைக் குறித்தும் எந்தக் கசப்பும் நமக்கு வராதபடி நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் கவனமுள்ளவர்களாக அனுதினமும் நடந்து கொள்ள வேண்டும். இந்த நாட்கள் வேதாகமத்தின்படி நடக்கும் நாட்களாக நாம் மாற்ற வேண்டும். அப்போது தேவன் கிரியை செய்வார்.

தேவகிருபையால் அநேக கசப்பான அனுபவங்கள் உள்ளவனாக நான் ஆண்டவரை ஏற்றுக் கொண்ட சமயத்தில் காணப்பட்டேன். அச்சமயத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைக்காக ஜெபிக்கும்படி தேவன் என்னை நிரப்பினார். அந்த ஜெபம் விரைவில் கேட்கப்பட்டு எல்லாரோடும் ஒப்புரவாகிக்கொள்ள தேவன் பெலன் கொடுத்தார். அவருடைய கிருபையினால் அந்த அனுபவத்தில் இன்னும் வளர்ச்சியடைய விரும்புகிறேன். யோபுவுக்கு கொடுத்த ஆசீர்வாதத்தை எனக்கும் மற்றும் அனைத்து விசுவாசிகளுக்கும் தேவன் கொடுக்க வேண்டும் என்றும் பாரத்துடன் ஜெபித்து வருகின்றேன். நிச்சயமாகவே அனைத்து விசுவாசிகள், ஊழியர்கள் வாழ்விலே காதால் ஆண்டவரைப் பற்றி கேள்விப்பட்ட அனைவரும் இனி தங்கள் கண்களால் தேவனை காணும் உயர்ந்த நிலையை தேவன் தருவார் என்றும் விசுவாசிக்கிறேன். நீங்களும் இந்த உன்னத அனுபவத்தில் பங்குள்ளவர்களாக மாற போகின்றீர்கள். தேவன் உங்களுடனே நேரடியாகவே பேசுவார். அப்படிப்பட்ட நாட்களுக்காய் ஜெபிப்போம். ஆமென்.

சகோ. **P.D.ஞானப்பிரகாசம்,** சுரண்டை.

ஜெப எண் - 269 | ஜெப நாள்: 02-04-2024 செவ்வாய் | காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. ஏப்ரல் மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக :

1. நீதிமொழிகள் 20:6 மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள். நாம் இப்படிப்பட்டவர்களாய் இம்மாதமும், வாழ்நாள் முழுவதும் வாழாமல் தேவன் கிருபை செய்யவும், தாழ்மையுள்ளவர்களாய் எப்போதும் நடந்து கொள்ளவும் ஜெபிப்போம்.
2. ஓசியா 6:11 யூதாவே, உனக்கு ஒரு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறுப்புக் காலம் இம்மாதத்தில் நிறைவேறவும், அதைத் தடை செய்யும் அந்தகார வல்லமைகள் அழிக்கப்படவும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.
3. அப்போஸ்தலர் 12:12 அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இம்மாதம் நாம் யாவரும் இப்படியாக நடக்கவும், இதனால் சிறைபட்டுப் போனவர்கள் விடுதலை பெறவும், ஜெபத்தின் மேன்மையை நாம் உணரவும் ஜெபிப்போம்.
4. எசேக்கியேல் 14:23 நான் அதிலே செய்த எல்லாவற்றையும் முகாந்தரமில்லாமல் செய்யவில்லையென்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள். முந்தின மாதத்தில் நம் குடும்பத்தில் நடந்த காரியங்களுக்கு உரிய பதிலை தேவன் வெளிப்படுத்த ஜெபிப்போம்.
5. ஏசாயா 40:29 சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து.... பழைய மாதங்களில் நம்மில் காணப்பட்ட சோர்வுகள் யாவும் மாறவும், இப்புதிய மாதத்தில் தேவ பெலன் நம்மில் காணப்படவும், அநேக அற்புதங்கள் நடைபெறவும் ஜெபிப்போம்.
6. ரோமர் 14:16 உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். இந்த வசனத்தின்படி இம்மாதம் நாம் நடக்கத் தேவையான ஞானத்தையும், தெளிந்த புத்தியையும் தேவன் நமக்குக் கட்டளையிடவும், இதனால் கிருபைகள் பெருகவும் ஜெபிப்போம்.
7. I தீமோத்தேயு 3:1 கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை. கர்த்தர் நம் கையில் கொடுத்த உலக வேலைகளையும், ஆவிக்குரிய வேலையையும் தேவ பயத்துடன் செய்ய ஜெபிப்போம்.

### 2. இந்தியாவில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்காக:

1. I தீமோத்தேயு 2:1 எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்கள் அனைவரும் சுதந்திரமாய் வாக்களிக்க ஜெபிப்போம்.
2. நெகேமியா 2:18 என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும்... நெகேமியா மீது நன்மையாக இருந்த தேவகரம், தேர்தல் நாட்களில் நம் தேசத்தின் மீதும், உரிய அதிகாரிகள் மீதும் நன்மையாக இருக்கவும் ஜெபிப்போம்.
3. Iநாளாகமம் 4:10 யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி, தேவரீர் என்னை ஆசீர்வதித்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார். தேர்தலுக்காக ஜெபம் இன்னும் ஏறெடுக்கப்பட ஜெபிப்போம்.
4. மத்தேயு 24:14 இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும். சுவிசேஷம் அறிவிக்க அனுகூலமான தேர்தலாக மாற கர்த்தர் கிரியை செய்ய ஜெபிப்போம்.
5. எண்ணாகமம் 13:30 அப்பொழுது காலேப், மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி, நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்து கொள்ளலாம் என்றார். தேர்தல் எளிதாய் நடக்க ஜெபிப்போம்.
6. யாத்.9:11 அந்தக் கொப்புளங்களினிமித்தம் மந்திரவாதிகளும், மோசேக்கு முன்பாக நிற்கக் கூடாதிருந்தது, தேர்தலுக்கு முன்பாக குழப்பத்தை உண்டாக்க நினைக்கும் மந்திர சக்திகள் செயலற்றுப் போகவும், அழிக்கப்படவும் ஜெபிப்போம்.
7. ஆதியாகமம் 50:20 நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். தேவனோ, அதை நன்மையாக முடியப்பண்ணினார். தேர்தலும், தேர்தல் முடியும் நன்மையாக மாற, கர்த்தரின் கிரியை பலமாய் நடைபெற போராடி ஜெபிப்போம்.

### 3. நம் தேசம் முழுவதும் இரட்சிக்கப்படவும், அபிஷேகம் பெறவும்:

1. தானியேல் 3:29 இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை. தானியேல் நாட்களில் தேசத்தில் எழுப்புதல் ஏற்பட்டது போல, இந்நாட்களிலும் நம் தேசத்தில் அதிகாரமுள்ள தேவ வார்த்தைகள், தேசத் தலைவர்கள் மூலம் வெளிப்பட ஜெபிப்போம்.
2. சகரியா 3:9 இந்த தேசத்தின் அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நம் தேசத்தில் தேவனின் கிரியை உடனடியாக வெளிப்படவும், அதனால் தேசம் பரிசுத்தமடைந்து, சாட்சியாய் மாறவும் ஜெபிப்போம்.
3. சங்கீதம் 106:23 அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருக்கு முன்பாகத் திறப்பின்

வாயிலே நின்றான் (மோசே). மோசேபோல இன்னும் திறப்பின் வாயில் நிற்கும் ஊழியர்களை தேவன் திரளாய் நம் தேசத்தில் எழுப்ப ஜெபிப்போம்.

4. ஆதியாகமம் 41:38 தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்றான். தேவ ஆவியை பெற்ற யோசேப்புகள் போன்ற தீர்க்கத்தரிசிகள் இன்னும் நம் தேசத்தில் எழும்ப, தேவரகசியங்கள் வெளிப்பட ஜெபிப்போம்.

5. லேவியராகமம் 8:36 கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள். தேசத்தின் தலைவர்களுக்கு, ஊழியர்களுக்கும் தேவ கட்டளைகள் கிடைக்கவும், அதற்கு கீழ்ப்படியவும் ஜெபிப்போம்.

6. எசேக்கியேல் 38:23 நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக, என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள். இந்த வசனம் தேசத்தில் நிறைவேற ஜெபிப்போம்.

7. சகரியா 10:1 பின்மாரி காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள். தேசமெங்கும் பரிசுத்த ஆவி பலமாய் ஊற்றப்படவும், விரைவில் தேசம் முழுவதும் இரட்சிக்கப்பட்டு, அவியை பெற்றுக் கொள்ள கர்த்தரை ஸ்தோத்தரித்து ஜெபிப்போம்.

## 4. எழுப்புதல் ஜெப ஐக்கியம் மூலம் பலத்த அற்புதங்கள் நடைபெற:

1. அப்.4:7 நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள். இப்படியாக அப்போஸ்தலர் காலத்தில் கேட்ட கேள்வியானது, இன்று நம் ஐக்கியத்தில் கேட்கப்படவும், பலத்த தேவ கிரியை ஊழியத்தில் நடக்கவும் ஜெபிப்போம்.

2. எரேமியா 17:10 கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன். இவ்வசனம் ஐக்கியத்தில் எழுப்புதலைக்கொண்டு வர ஜெபிப்போம்

3. யோனா 3:2 நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய் பிரசங்கி என்றார். யோனாவுக்கு தேவ வார்த்தை மறுபடியும் கிடைத்தது போல, ஐக்கியத்திற்கும் தேவ வார்த்தை திரும்பவும் கிடைக்க ஜெபிப்போம்.

4. மீகா 4:13 சீயோன் குமாரத்தியே நீ எழுந்து போரடி. நீ அநேக ஜனங்களை நொறுக்கிப் போடுவாய். இந்த வசனத்தின்படி, ஐக்கியம் முழுவதும் ஆவியில் நிறைந்து செயல்படவும், இன்னும் புதிய, ஊழிய வழி கிடைக்கவும் ஜெபிப்போம்.

5. மல்கியா 3:8 மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? ஐக்கிய ஊழியர்கள் அனைவரும் வஞ்சனை இல்லாத காணிக்கை கொடுத்து, தேவனுடைய பூரண ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவும், புதிய ஆத்துமாக்கள் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

6. லூக்கா 1:20 இதோ, தகுந்த காலத்தில் நிறைவேறப் போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாத படியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல், ஊமையாய் இருப்பாய் என்றான். ஐக்கியம் விசுவாசத்தில் இன்னும் வளர ஜெபிப்போம்.

7. I கொரிந்தியர் 14:1 அன்பை நாடுங்கள். ஞான வரங்களையும் விரும்புங்கள். விசேஷமாய் தீர்க்கத்தரிசன வரத்தை விரும்புங்கள். இந்த வசனம் முழு ஐக்கியத்திற்கும் தீவிரமாய் கிரியை செய்யவும், சீக்கிரமாய் நம் ஐக்கியம் மூலம் உயிர் மீட்சி உண்டாக ஜெபிப்போம்.

## 5. ஊழியர்களின் குடும்பங்கள் ஆவியில் அனலாயிருக்க:

1. யோசுவா 24:15 நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம். யோசுவா பல்வேறு பொறுப்புகள் மத்தியில் குடும்பத்தை ஆவியில் அனலாய் வைத்துக் கொண்டது போல, நம் குடும்பங்கள் யாவும் மாற ஜெபிப்போம்.

2. எபிரெயர் 11:7 விசுவாசத்தினாலே நோவா தேவ எச்சரிப்பு பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டு பண்ணினது போல, நமக்கும் தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

3. எபிரெயர் 11:11 விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று எண்ணி, கர்ப்பம் தரிக்க பெலனடைந்து வயது சென்றவளாய் இருந்தும் பிள்ளை பெற்றாள். இக்குடும்பம் விசுவாசத்தில் அனலாய் இருந்தது போல நம் குடும்பமும் மாற ஜெபிப்போம்.

4. அப்.10:2 அவன் தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனாய் இருந்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். இதைப்போல அனைத்து குடும்பங்களும் மாற ஜெபிப்போம்.

5. சங்கீதம் 116:16 கர்த்தாவே, நான் உமது அடியேன். நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாய் இருக்கிறேன். என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர். கட்டுகளோடு இருக்கும் ஊழியர்களின குடும்பத்தில் ஓர் விடுதலையை தேவன் தர ஜெபிப்போம்.

6. யோபு 42:12 கர்த்தர் யோபின் முன்னிலைமையை பார்க்கிலும், பின்னிலைமையை ஆசீர்வதித்தார். விசுவாசிகள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கை ஊழியம் யாவும் யோபுவின் குடும்பம் போல் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க ஜெபிப்போம்.

**ஏப்ரல் 2024**

## தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.

01.04.24 திங்கள் : லூக்கா 12:49 பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன். இயேசு கிறிஸ்துவினுடைய விருப்பம் சீக்கிரமாக நிறைவேற வேண்டும். பூமியின் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கி அக்கினியாய் கிரியை செய்ய வேண்டும். இப்படி நடைபெற வேண்டுமென்று சொல்லி ஊக்கமாய் யாவரும் இணைந்து ஜெபிப்போம். பாடுள்ள மனுஷனாகிய எலியாவின் ஊழியத்தில் அக்கினி இறங்கினது போல நாம் செய்யும் ஊழியங்களிலும் அக்கினி இறங்க வேண்டும்.

02.04.24 செவ்வாய் : யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார். வேதத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் இவ்விதமாக வாழ்ந்து தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டதுபோல நாம் அனைவரும் இந்த விதமாக ஊழியம் செய்யவும் அழைக்கப்பட்டுள்ளோம். கர்த்தர் தமது கிருபையை நமக்குத் தருவார்.

03.04.24 புதன் : அப்போஸ்தலர் 5:11 சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று. அனனியா, சப்பிராள் தங்கள் காணிக்கைகளை வஞ்சித்து தேவனுடைய தண்டனையை பயங்கரமாக பெற்றுக் கொண்டார்கள். நம்மில் யாரும் இவ்விதமாய் இராமல் நாம் செலுத்தும் காணிக்கைகளை உண்மையும் உத்தமுமாக தேவனுக்குப் படைக்க வேண்டும். இந்த காணிக்கை விஷயத்தில் நாம் குறைவுள்ளவர்களாக இருந்தால் உடனே சரி செய்து தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

04.04.24 வியாழன் : ரோமர் 5:5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. இந்த கடைசிக் காலங்களில் அப்போஸ்தலர்களை நிரப்பின அன்பின் ஆவியாகிய பரிசுத்த ஆவியை தேவன் நம்முடைய இருதயங்களில் ஊற்ற வேண்டும். இன்னும் நம்மில் காணப்படும் கசப்புகளை பரிசுத்த ஆவியின் பலத்தோடு நம்மை விட்டு விலக்க வேண்டும். அப்போது தேவன் நம்மை பயன்படுத்துவார்.

05.04.24 வெள்ளி : I கொரிந்தியர் 6:4 இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்பு செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள். சபையில் நமக்கும் பிறருக்கும் சில வழக்குகள் இருக்குமானால் இந்த வசனத்தின்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். அப்போது பெரிய பிரச்சனையாக இருப்பது போல இருக்கும் நம்முடைய வழக்குகள் எளிதாக தீர்ந்து விடும். ஆபிரகாம் லோத்து இவர்களுக்குள் இருந்த பிரச்சனையை எளிதாக தீர்த்து வைத்தார் ஆபிரகாம்.

06.04.24 சனி : II கொரிந்தியர் 3:8 ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும். நம் கையில் கர்த்தர் ஆவிக்குரிய ஊழியத்தைக் கொடுத்துள்ளார். ஆவியானவர் நடத்துகிறபடி ஊழியத்தை நாம் செய்ய வேண்டும். தீர்ப்பு கொடுக்கிற ஊழியம் நம்முடையது அல்ல. அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய ஊழியத்தை விடாமல் செய்தபடியால் கர்த்தர் அவர்களைப் பயன்படுத்தினார். நாமும் ஆவியோடு ஊழியம் செய்வோம்.

07.04.24 ஞாயிறு : கலாத்தியர் 3:3 ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? ஆவியின் அபிஷேகம் பெற்ற நாம் மாம்சத்தின்படி இனி நடக்கக்கூடாது. அப்படி நடப்போமானால் காலா காலத்தில் நாம் சோர்ந்து போய் விடுவோம். இதற்கு இடங்கொடாதபடி தினசரி வேத தியானமும், ஜெபமும் நம்மில் இன்னும் பெருக வேண்டும். மூத்த குமாரன் மாம்சத்தின்படி நடந்து கொண்டதால் அவரால் தேவ வல்லமையை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

08.04.24 திங்கள் : எபேசியர் 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. நாம் இன்று வரை நிலைத்து நிற்பது தேவனின் கிருபையே. அப்போஸ்தலனாகிய பவுல் கிருபையை நம்பி இருந்தபடியால் கடைசி வரை ஊழியத்தை நிறைவேற்றி முடித்தார். கர்த்தர் நம் கையில் கொடுத்த குடும்பத்தை இன்னும் உற்சாகப்படுத்த தேவனுடைய கிருபைக்காக காத்திருப்போம். ஒருநாளும் நாம் வெட்கப்பட்டுப் போய்விடாதபடி கர்த்தர் நமக்கு பெலன் தருவார்.

09.04.24 செவ்வாய் : பிலிப்பியர் 4:4 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். இந்த வசனத்தின்படி நாம் வாழ முடியாதபடி சாத்தான் பலவிதமான இடையூறுகளை நமக்குக் கொண்டு வரும் போது அதற்கு இடங்கொடாமல் துதியின் ஆவியால் நிரம்பி நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போது பிசாசினுடைய கிரியையில் இருந்து நாம் தப்பிக்கொள்ள முடியும். யோபு இவ்விதமாய் வாழ்ந்து கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தார்.

10.04.24 புதன் : கொலோசெயர் 3:9 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு.... நாம் முடிவுபரியந்தம் நிலைநிற்க வேண்டும். அதற்கு பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட வேண்டும். இவ்விதமாக நடந்து கொள்வோமானால் ஆவிக்குரிய ஜீவியத்தில் நல்ல வளர்ச்சியை காண முடியும். தாவீது தன்னை அடிக்கடி பரிசோதித்துக் கொண்டப்படியால் சிறப்பான ஆட்சியும் செய்து கொண்டு ஊழியமும் செய்ய முடிந்தது.

11.04.24 வியாழன் : I தெசலோனிக்கேயர் 5:6 ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல் , விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். பேதுரு இவ்வாறு வாழ்ந்தபடியால் தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றது மட்டுமல்ல தூங்கிக் கொண்டிருந்த அநேகரை தட்டி எழுப்பினார். நாம் ஒவ்வொருவரும் இவ்விதமாய் ஊழியம் செய்ய வேண்டும். அதற்காக நன்றாக ஜெபிக்க வேண்டும். அப்போது தேவன் நமக்கு முன்சென்று நம்முடைய அழைப்பிற்கு தக்கபடி நம்மை நடத்துவார்.

12.04.24 வெள்ளி : II தெசலோனிக்கேயர் 3:2 துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள், விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே. இந்த நாட்களில் விசுவாசிகளுக்காகவும், ஊழியர்களுக்காகவும், திருச்சபைகளுக்காகவும் அதிகமாக ஜெபிக்கும் பொழுது நல்ல எழுப்புதலை காண முடியும். ஏன் இவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்றால் நம்மைச் சுற்றிலும் துர்க்குணராகிய பொல்லாத மனுஷர்கள் இருக்கின்றார்கள். பவுல் இவ்வாறு வாழ்ந்து காட்டினார்.

13.04.24 சனி : I தீமோத்தேயு 1:12 என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். தேவன் நம்மை தெரிந்து கொண்டபடியால் நாள்தோறும் நம்மை பலப்படுத்துவார். எந்தச் சூழ்நிலையிலும் சோர்ந்து போய்விடக்கூடாது. எலியாவை பலப்படுத்தினவர் நம்மையும் தினமும் பலப்படுத்தி குடும்பமாக சாட்சியாக வாழ வேண்டிய கிருபைகளை தேவன் தந்து நடத்துவார்.

14.04.24 ஞாயிறு : II தீமோத்தேயு 2:7 நான் சொல்லுகிறவைகளை சிந்தித்துக்கொள், கர்த்தர் எல்லாக் காரிங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார். ஆவிக்குரிய ஜீவியத்தில் நிலைத்து நிற்க நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகளை தேவனிடம் கேட்டும் பெற்றுக் கொள்ள வேண்டும். நெகேமியா போன்ற தேவ மனிதர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய புத்திமதியை தேவனிடம் பெற்றுக் கொண்டார்கள் அதுபோல நம் அனைவர் குடும்பத்திற்கும் தேவையான புத்திமதியை தேவன் தருவார்.

15.04.24 திங்கள் : தீத்து 3:9 புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக்குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு, அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நமக்கு வரும் போது நாம் அதில் தலையிடாதபடி அவைகளை தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். தேவன் சரியான நேரத்தில் அற்புதங்களை நமக்குச் செய்வார். இவ்விதமாக வாழ்ந்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அநேகர். அதில் ஈசாக்கும் ஒருவர்.

16.04.24 செவ்வாய் : பிலேமோன் 1:20 ஆம், சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜனமுண்டாகட்டும், கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும். சில நேரங்களில் நம்முடைய உள்ளங்களில் இளைப்பாறுதல் இல்லாமல் இருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது அமைதியான இடங்களுக்குச் சென்று வசனங்களை வாசித்து ஜெபிப்போமானால் தேவன் நம்மோடு நிச்சயம் பேசுவார். இதை நம்முடைய பழக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும். மரியாள் இதற்கு சாட்சியாகும்.

17.04.24 புதன் : எபிரெயர் 2:1 ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். அனுதினமும் நாம் கேட்கும் காரியங்கள் அநேகமாய் இருப்பதாலும் அதன்படி நடப்பதற்கு நாம் பிரயாசப்பட வேண்டும். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையானது நூறு மடங்கு

பலன் கொடுத்ததுப்போல நாமும் இவ்விதமாய் வாழ வேண்டும். கடைசி வரை நிலைத்து நின்று ஏராளமான ஆத்துமாக்களை நாம் ஆதாயம் செய்ய வேண்டும். அப்போது தேவன் நம்மைப் பயன்படுத்துவார்.

18.04.24 வியாழன் : யாக்கோபு 5:18 மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது. எலியா என்பவர் அந்ததந்த சூழ்நிலைக்கு தக்கப்படி சரியான வார்த்தைகளை சொல்லி ஜெபித்து ஜெயம் பெற்றது போல நம்முடைய ஜெபமும் இருக்க வேண்டும். சொன்ன வார்த்தைகளையே சொல்லி கொண்டிராமல் ஆவிக்குரிய வார்த்தைகளை சொல்லி ஜெபித்தால் ஜெபமும் கேட்கப்படும் மற்றவர்களும் அதனால் மிகுந்த பயனடைவார்கள். அதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

19.04.24 வெள்ளி : I பேதுரு 1:7 அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். ஆபிரகாம் இந்த விசுவாசத்தில் நிலைத்திருந்தான். நாம் யாவரும் குடும்பமாக விசுவாசத்தில் நிலைத்திருந்து உரிய ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவர்களாக இன்னும் மாற வேண்டும். விசுவாசத்தின் மதிப்பு மேலானது.

20.04.24 சனி : II பேதுரு 1:21 தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். வேத வசனங்கள் அனைத்தும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தது. தாவீது வேத வசனங்களை சார்ந்து வாழ்ந்தார். அதுபோல நாமும் வேத வசனங்களை இன்னும் தியானித்து அதன் மூலமாக கர்த்தர் நம்மோடு பேசும் சகல சத்தியங்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவைகளை நடைமுறைபடுத்த வேண்டும். நாம் கற்றுக்கொண்ட வசனங்கள் கடைசி வரை நம்மை வழிநடத்தும்.

21.04.24 ஞாயிறு : I யோவான் 3:17 ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்கு; குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? ஏசா, யாக்கோபு இருவரும் ஒருவருக்கொருவர் ஐக்கியமாகி தேவ அன்பை பகிர்ந்து கொண்டார்கள். இதை வாசிக்கிற நாம் சகோதரர்களுக்குள் உள்ள அன்பை இன்னும் அதிகமாக புதுப்பித்துக் கொள்ள வேண்டும். கசப்புகளை மனதில் கொள்ளாதபடி வாழ்வதே மிக சிறந்ததாகும்.

22.04.24 திங்கள் : II யோவான் 1:1 நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தினிமித்தம், நான் மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தினபடி நேசித்திருக்கிறவளும்.. எல்லாச் சூழ்நிலைகளிலும் சத்தியமாகிய வசனத்தின்படி வாழ நாம் கற்றுக்கொள்ளும் போது, சத்தியம் நம்மை விடுதலையாக்குவதை காண முடியும். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கத்தரிசிகள் ஜனங்களுக்கு சத்தியத்தை விளங்கப்பண்ணினார்கள். நாமும் சத்தியத்திற்கு கீழ்படிவோம்.

23.04.24 செவ்வாய் : III யோவான் 1:5 பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய் செய்கிறாய். தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற காரியம் என்னவென்றால் உண்மை என்பதேயாகும். உண்மையில்லாமல் வாழ்வோமானால் விரைவில் சோர்ந்து போய் விடுவோம். லூக்கா 18வது அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள விதவை தன்னுடைய பிரச்சனைக்கு அநீதியுள்ள நியாயதிபதியை உண்மையாய் நம்பினபடியால் ஜெயம் பெற்றாள். நமக்கும் ஆண்டவர் இவ்விதமாய் வழிநடத்துவார்.

24.04.24 புதன் : யூதா 1:20 நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி.. இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள விசுவாசம், பரிசுத்த ஆவி, ஜெபம் இவை அனைத்தும் நமக்கு மாத்திரம் அல்ல நம்முடைய பிள்ளைகளுக்கும் அவசியமாகும். இதில் குறைவு காணப்பட்டால் தேவனிடம் மன்றாடுவோம். அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டவர்கள் இந்த அனுபவத்தில் வளர்ந்தது போல நாமும் வளர்ச்சி பெற வேண்டும்.

25.04.24 வியாழன் : வெளிப்படுத்தல் 6:17 அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள். தேவனுடைய கோபாக்கினையின் நாளில் யாரும் அழிந்துவிடாதபடி ஊழியர்களாகிய நாம் மற்றவர்களுடைய மீட்புக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்கும் பொழுது மோசே போன்ற தேவனுடைய மனிதர்கள் திறப்பின் வாசலில் நின்று ஜெபித்ததால் ஜனங்களுக்குள் வர இருந்த தண்டனை வராமல் ஜனங்கள் காக்கப்பட்டார்கள். உங்கள் ஜெபமும் கேட்கப்படும்.

26.04.24 வெள்ளி : ஆதியாகமம் 39:2 கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான், அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். யோசேப்போடு

கர்த்தர் இருந்தது போல நம்மோடும் கூட கர்த்தர் இருந்து கிரியை செய்யப் போகிறார். நாம் நம்முடைய அழைப்பை விட்டு விடாமல் இன்னும் அதிகமாக தேவனையும் அவருடைய கிரியைகளையும் நாட வேண்டும். அப்போது தேவன் நம்மை எவ்வளவு உயர்த்தி வழிநடத்தமுடியுமோ அந்தளவு வழிநடத்துவார்.

27.04.24 சனி : யாத்திராகமம் 6:26 இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து நடத்திக் கொண்டுபோவதற்குக் கர்த்தரால் கட்டளைபெற்ற ஆரோனும் மோசேயும் இவர்களே. மோசே, ஆரோன் ஜனங்களை வழி நடத்துவதற்கு தேவனால் கட்டளைபெற்றவர்களாக இருந்தது போல உங்களையும் அநேகரை ஆண்டவருக்குள் வழிநடத்தும் கட்டளை பெற்ற ஊழியர்களாக கர்த்தர் தெரிந்தெடுத்துள்ளார். என்னால் இது முடியுமா என்று யோசிக்க வேண்டாம். கர்த்தர் உங்களைக்கொண்டு அநேகரை இரட்சிப்பார்.

28.04.24 ஞாயிறு : லேவியராகமம் 22:29 கர்த்தருக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்துவீர்களானால் மனப்பூர்வமாய் அதைச் செலுத்துவீர்களாக. நாம் குணமடைந்த ஒரு குஷ்டரோகியை போல மனப்பூர்வமாய் ஸ்தோத்திரம் செலுத்தும்போது கர்த்தர் இன்னும் மேலான வழிகளை நமக்குக் காட்டுவார். மீதி ஒன்பது பேரும் சுகமடைந்தாலும் நன்றி சொல்லாமல் போனபடியால் அவர்கள் பரிதாபத்துக்குரியவர்களானார்கள். ஸ்தோத்திரப்பலியை எப்பொழுதும் தேவனுக்கு சொல்லிக் கொண்டே இருப்போம்.

29.04.24 திங்கள் : எண்ணாகமம் 11:14 இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது, எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. மோசே சற்று பலவீனமான சூழ்நிலையில் இந்த வார்த்தையை கூறினார். நாம் ஒருவர் கூட இப்படிப்பட்ட வார்த்தையை சொல்லி விடக்கூடாது. நமக்கு ஒரு போதும் தேவன் மிஞ்சின பாரத்தை சுமத்த மாட்டார். சுமத்தப்பட்ட பாரங்களை சுமந்து தீர்க்க தேவனுடைய ஒத்தாசையை தேட வேண்டும். அப்போது தேவன் இரங்கி நம்முடைய கடமையை செய்து முடிக்க கிருபை தருவார்.

30.04.24 செவ்வாய் : உபாகமம் 8:2 உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்தி வந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. உங்களை இத்தனை ஆண்டு காலமாக வழி நடத்தின தேவனுக்கு தொடர்ந்து நன்றி சொல்லிக்கொண்டே இருப்போம். இஸ்ரவேல் ஜனங்கள் நன்றி சொல்ல மனமற்றவர்களாக போனது போல நம்மில் யாரும் காணப்படாதபடி தீமையானவைகளுக்கும் நன்றி சொல்லுவோம். தேவன் நம்முடைய ஸ்தோத்திரத்தை ஏற்றுக்கொண்டு இன்னும் நன்மையான வழிகளைக் காண்பிப்பார்.

## பிப்ரவரி மாத ஊழியப் பகிர்மானங்கள்

1. 04-02-24 - ஞாயிற்றுக்கிழமை, ஷாலோம் பள்ளி, ஐக்கிய மூப்பர் கூடுகை
2. 07-02-24 புதன்கிழமை, கடைசிக்கால அபிஷேக ஜெபம், சுரண்டை
3. 10-02-24 - சனிக்கிழமை, உபவாச ஜெபம், சுரண்டை
4. 11,12-02-24 - ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை, சென்னை ஊழியங்கள்
5. 11-02-24 - ஞாயிற்றுக்கிழமை, உக்கிரன்கோட்டை CSI சர்ச் ஊழியம்
6. 15-02-24 - வியாழக்கிழமை, கன்வென்ஷன் கூட்டம், குறிச்சான்பட்டி
7. 16,17,18-02-24 - வெள்ளி, சனி, ஞாயிறு லெந்து கால கூட்டங்கள், பங்களாச்சுரண்டை
8. 16-02-24 - வெள்ளிக்கிழமை, காத்திருப்பு ஜெபம், சுரண்டை
9. 22-02-24, 29-02-24 - வியாழக்கிழமை, சுகமளிக்கும் ஆராதனை, கடையம் சபை
10. 24,25-02-24 - சனி, ஞாயிறு, கன்வென்ஷன் கூட்டங்கள் - பரப்பாடி, சாம்பவர்வடகரை
11. 25-02-24 - ஞாயிற்றுக்கிழமை, ஆண்கள் தினான முகாம், சுரண்டை
12. 28-02-24 - புதன்கிழமை, பௌர்ணமி ஜெபம், சுரண்டை

மேற்கண்ட ஊழியங்களில் ஆவியானவர் கிரியை செய்தார். இதுபோல இன்னும் வழக்கமாய் நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும், கர்த்தர் நடத்தினார். உங்கள் ஜெப உதவிக்கு நன்றி கூறுகின்றோம். இன்னும் ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். ஆமென்.

தேவனுக்கே மகிமை

பெண்கள் பகுதி

# பலவீனப்படுத்தும் ஆவியிலிருந்து விடுதலை பெற்ற பெண்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதத்தில் இச்செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதத்திலே பலவீனப்படுத்தும் ஆவியிலிருந்து விடுதலை பெற்ற பெண்ணைப் பற்றி தியானிப்போம்.

லூக்கா எழுதின சுவிசேஷம் 13ஆம் அதிகாரம் 10 முதல் 17ஆம் வசனம் வரை இந்த ஸ்திரீயைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இந்த ஸ்திரீ 18 வருஷம் பலவீனப்படுத்தும் ஆவியால் பாதிக்கப்பட்டிருந்தாள். ஒரு நாள் இயேசு ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருக்கும் பொழுது அங்கு இந்த ஸ்திரீயும் சென்றிருந்தாள். அவளுக்கு இயேசு இந்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார். அந்த ஸ்திரீயும் தேவனை மகிமைப்படுத்தினாள். இதற்கு அவளிடம் காணப்பட்ட குணங்களை பற்றி இச்செய்தியில் காண்போம்.

**முதலாவதாக அவளிடம் காணப்பட்ட விசுவாசம் : லூக்கா 13:11**

இயேசு ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது 18 வருஷமாய் பலவீனப் படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். 18 வருடமாகப் பலவீனம் இருந்தாலும் அதை சாக்குபோக்குச் சொல்லி ஆலயத்திற்கு செல்லாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் அச்சூழ்நிலையிலும் விசுவாசமாகத் தேவன் என்னை விடுவிப்பார் எனறு காத்திருந்தாள். விசுவாசத்தை விட்டுவிடாமல் எல்லா ஓய்வு நாளிலும் ஆலயம் சென்று வந்தாள். அன்று அப்படி சென்ற நாளில் தான் இயேசு அங்கு வந்திருந்தார். அப்பொழுது இயேசு அந்த ஸ்திரீயைப் பார்த்து ஸ்திரீயே உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி அவள் மேல் தமது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள். தன் சரீர பலவீனத்திலும் விசுவாசத்தை விடவில்லை, சோர்ந்து போகவில்லை, இயேசுவை விடாமல் நம்பிக்கையோடு தேடினாள். நாமும் நம் வாழ்வில் வரும் பலவீனங்களைக் கண்டு சோர்ந்து போகாதபடிக்கு விசுவாத்தோடு தேவனைத் தேடுவோம். எந்தவிதத்திலும் தேவன் எனக்கு ஏன் இப்படி அனுமதித்தார் என கேள்வி கேட்கவில்லை. சரீரத்தில் வரும் எந்த பலவீனமும் எந்த வேதனையும் கிறிஸ்துவை விட்டு நம்மைப் பிரிக்காமல் விசுவாசத்தில் வைராக்கியமாய் அவரைத் தேடி வருவோம். தேடும் பொழுது அவர் தென்படுவார். விடுதலை தருவார். இப்படிப்பட்ட விடுதலையை நாமும் விசுவாசித்து பெற்றுக் கொள்வோம். ஆமென். அல்லேலூயா.

**இரண்டாவதாக அவளிடம் காணப்பட்ட காரியம் சோர்ந்து போகாமல் தேடினாள் : லூக்கா 18:11**

18 வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஸ்திரீ சோர்வில்லாமல் 18 வருஷமாகத் அவரைத் தேடிக் கொண்டேயிருந்தாள். எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாக இருந்தாள். ஆனாலும் அவள் சோர்ந்து போகாமல் வாஞ்சையோடு தேடினாள். அதனால் தான் அன்று இயேசு ஜெப ஆலயத்திற்கு வந்தவர் அவளுடைய பலவீனத்தை நீக்கி சுகம் கொடுத்தார். அவள் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாள். இச்செய்தியைத் தியானிக்கிற நாமும்கூட நம் வாழ்வில் வருகிற பலவீனம் பல நாட்கள், மாதங்கள், வருடங்கள் நீங்காமல் நம்மை வேதனைப்படுத்திக் கொண்டேயிருந்தாலும் எந்த விதத்திலும் இயேசுவைத் தேடுகிறதை விட்டுவிடாதபடி சோர்ந்துபோகாமல் தேடினால். இயேசு பலவீனத்தை நீக்கிப் பலப்படுத்துவார். எந்த பலவீனம் வந்தாலும் ஊழியஞ்செய்வதை, வேதம் வாசிப்பதை, ஆலயம் செல்வதையும் விட்டுவிடாமல், சோர்ந்து போகாமல் இயேசுவைத் தேடினால் நமக்கும் இயேசு விடுதலை தருவார். நாமும் சோர்ந்து போகாமல் தேடி இயேசுவிடமிருந்து பலவீனத்தினின்று விடுதலையைப் பெற்றுக் கொள்வோம். ஆமென் அல்லேலூயா.

**மூன்றாவதாக தடையை மீறி இயேசுவைத் தேடின ஸ்திரீ : லூக்கா 13:11**

இயேசு சென்ற ஜெப ஆலயத்தில் ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியினால் பாதிக்கப்பட்டு எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இந்த பலவீனத்தை வைத்தே அங்குள்ள மக்கள் அவளை தடை பண்ணிருந்திருப்பார்கள். இவ்வளவு நாளாகத் தொடர்ந்து ஆலயம் செல்கிறாயே இன்னும் உனக்கு சுகம் கிடைக்கவில்லையே என்று கேலி செய்திருப்பார்கள், மேலும் அவள் ஆலயம் செல்கிறதை சொல்லிச் சொல்லி நிந்தித்திருப்பார்கள். அவள் பலவீனத்தை சுட்டிக் காட்டி அவள் வீட்டார், அருகிலுள்ளவர்கள் எல்லோரும் கேலி பேசியிருப்பார்கள். பதினெட்டு வருஷமாக ஊனத்தை சுட்டிக்காட்டி அவளைத் தடைபண்ணியிருக்கலாம். இவையெல்லாவற்றையும் மேற்கொண்டு, தாங்கிக் கொண்டுதான் அந்த ஸ்திரீ ஆலயத்திற்குச் சென்றிருந்தாள். அந்த சமயம் அங்கு வந்த இயேசு அவளுக்கு பரிபூரண சுகம் கொடுத்தார். எங்கு தலைகுனிந்து நடந்தாளோ அதே இடத்தில் தலைநிமிர்ந்து நடக்கப்பண்ணினார். நாமும் நமக்கு வருகிற தடை, எதிர்ப்பு எல்லாவற்றையும் தாண்டி கர்த்தரைத் தேடும் பொழுது அவர் நமக்கு பரிபூரண விடுதலை தருவார். ஆமென்! அல்லேலூயா!

பலவீனப்படுத்தும் ஆவியைப் பெற்ற ஸ்திரீ விசுவாசத்தோடு தேடினாள், சோர்ந்து போகாமல் தேடினாள், தடை எதிர்ப்பையும் மீறி தேடினாள், பரிபூரண விடுதலையைப் பெற்றாள். நாமும் இவ்வாறு கர்த்தரைத் தேடி மேலான விடுதலையைப் பெற்றுக் கொள்வோம். ஆமென்! அல்லேலூயா!

எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.

# வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

## ஆசியாவிலிருக்கிற தியத்தீரா சபை. வெளி. 2:18-29

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆசியாவிலிருக்கிற சபைகளுக்குள் தியத்தீரா சபையின் நிலைமையையும் நாம் எப்படி இக்கடைசிக்காலத்தில் இருக்க வேண்டும் என்பதையும் வேத வசனத்தின் அடிப்படையில் தியானிப்போம். வெளி.2:18-29 வரை உள்ள வசனங்களை நாம் தியானிப்போம். 19ம் வசனத்தை நாம் வாசிக்கும்போது, உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாய் இருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் என்று தூதனானவர் கூறுகின்றார். இவைகள் அனைத்தும் நமக்குள் காணப்படவேண்டும். ஒருவேளை இந்தக் காரியங்களில் நாம் குறைவுபட்டிருப்போமானால் அவைகளை சரி செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இவைகள் சபையில் காணப்பட்டாலும், நம் பேரில் குறைவு உண்டு என்பதை சபை உணர வேண்டும். ஏனென்றால், தன்னைத் தீர்க்கத்தரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய் என்று வெளி.2:20 ல் நாம் வாசிக்கின்றோம். தியத்தீரா சபையில் நல்ல முன்னேற்றம் காணப்படாமலும், பயங்கரமான பாவங்களும், ஊழியர்களுக்கு சோதனையாக இருந்துள்ளது. இன்றைய விசுவாசிகளும், ஊழியர்களுமாகிய நாம் ஒரு பக்கம் ஆவியில் வளர்ச்சியுடன் காணப்பட்டாலும், இன்னொரு பக்கம் நமக்கு பெரிய சோதனை நம்மை விழத்தள்ள காத்திருக்கின்றது என்பதை மறந்து போக வேண்டாம். நம் விசுவாச ஜீவியத்தில் இன்னும் விலகி ஓட வேண்டிய காரியங்களில் நாம் ஓடாமல் இருப்போமானால் பாவங்களில் நாம் விழுந்துவிடுவோம். பாவம் நிறைந்து காணப்படும் இந்த நாட்களில், பல இச்சைகளில் நாம் விழாதபடி காத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக மற்றவர்களுக்கு பிரசங்கம் செய்யும் நாம் எச்சரிக்கையாய் வாழ வேண்டும். இனி பாவங்களுக்கு இடங் கொடுக்கக் கூடாது (வெளி.2:20)

பாவம் இருக்கும் இடத்தில் கிருபை அதிகமாய் பெருகும் என்று வேதம் கூறுகின்றபடியால் நாம் பாவத்தை விட்டு விலகி ஓட தேவன் கிருபை செய்வார். ஆனால் தவணையின் நாட்களைப் பயன்படுத்தி தேவகோபம் வருமுன் நம்மை பரிசுத்தப்படுத்த வேண்டும். நம்மில் பாவம் இருக்கும்போது, மனந்திரும்பும்படி தேவன் நமக்குத் தவணை கொடுப்பார் என்று வேதம் கூறுகின்றது. தவணையின் காலத்தை நாம் அல்லத் தட்டிவிடக்கூடாது. தேவன் கொடுக்கும் தவணையின் காலத்தை அலட்சியம் செய்யும் போது தேவன் மிகுந்த உபத்திரவத்தில் தள்ளுவார் (வெளி.2:22). நாம் செய்யும் பாவத்திற்கு உரிய தண்டனை நம் பிள்ளைகளுக்கும் உண்டு. எனவே நாம் எவ்வளவு தூரம் ஊழியம் செய்தாலும் பரிசுத்தத்திற்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும். தியத்தீரா சபையில் இந்தப் போதகத்தைப் பற்றிக் கொள்ளாமலும், சாத்தானின் ஆழங்கள் என்று கூறுகின்ற கிரியைகளை விட்டு மனந்திரும்பும் போது ஏராளமான கிருபைகள் நம்மை சூழ்ந்து கொள்ளும்.

அன்பானவர்களே, தியத்தீரா சபையில் காணப்படும் ஆவிக்குரிய நல்ல சத்தியங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை நாம் விட்டு விலக வேண்டும். நம்மை நாம் சரி செய்யும் போது, கிருபைகள் நம்மை சூழ்ந்து கொள்ளும். தேவன் நம்முடைய ஊழியத்திலே மிஞ்சின பாரத்தை சுமத்த மாட்டார். தியத்தீரா சபையின் நிலைமையை நாம் நன்கு காது கொடுத்து கேட்க அழைக்கப்பட்டிருக்கின்றோம், நாம் யாவரும் தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டிருக்கின்றோம். இன்னும் நிலைத்திருந்து தேவனின் கிரியைகளை காண வேண்டும். தியத்தீரா சபையில் ஆவிக்குரிய உற்சாகம் காணப்பட்டாலும், இரகசியமான பாவங்கள் அழிக்கப்படவில்லை. இந்தக் கடைசிக் காலத்தில் இந்த தியத்தீரா சபையின் நிறைவுகளை நாம் பெற்றுக் கொண்டு, தீமையான காரியங்களை விட்டு விலக அழைக்கப்பட்டுள்ளோம். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமடைய வேண்டும் என்ற வார்த்தையின்படி, பரிசுத்தத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வாழும் போது, தேவன் பயன்படுத்தும் பாத்திரமாய் மாறுவோம்.

இயேசுவின் வருகை மிக சமீபம். அதற்கு நாம் ஆயத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல நம்மோடு கூடின கூட்டத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். அடுத்தது, அவர்களுக்கு காவலாளனாய் மாற வேண்டும். மற்றவர்கள் செய்யட்டும் என்று நாம் ஒதுங்கி விடாமல் பொறுப்பாக நாம் செயல்பட வேண்டும். தடைகளைக் கொண்டு வரும் சாத்தானின் திட்டங்களை அழிக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் சோர்ந்து போகக்கூடாது. தேவன் தந்த ஆவியின் நிறைவு வரவேண்டும். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், சுவிசேஷ ஊழியத்தை ஜாக்கிரதையாய் செய்ய வேண்டும். அப்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். நம் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து சாட்சியாய் வாழ வேண்டும். தேவன் நமக்கு தேவையான ஆசீர்வாதங்களைத் தருவார். இன்னும் அதிகமாக வேதம் வாசித்து, ஜெபிக்க பழகிக் கொள்ள வேண்டும். நாம் ஐக்கியத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். கர்த்தர் நம்மை நடத்துவார். தியத்தீரா சபையின் நிறைவுகள் நமக்கு வரட்டும். குறைகள் நம்மை விட்டு மாற வேண்டும். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT IKKIYA MALAR

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Surandai |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name Address | : | P.Thanapaul<br>Ravi Printers<br>10-7-16, Bus-stand Road,<br>Surandai - 627859.<br>Tenkasi Dt. |
| 4. Publisher's Name Address | : | P.Duraisingh Gnanapragasam<br>14-6-3(34) Ratna Complex,<br>Surandai - 627859.<br>Tenkasi Dt. |
| Nationality | : | Indian |
| 5. Editor's Name | : | P.Duraisingh Gnanapragasam |
| Nationality | : | Indian |
| 6. Name and address | : | There is no Partner or individuals who own the shareholder of the magazine newspaper and partners or share holders holding more than one percent of the total Capital |

I, P.Duraisingh Gnanapragasam, hereby declare that the particulars given above are true the best of my knowledge and belief.

P.Duraisingh Gnanapragasam
Signature of Publisher

## 45-வது ஆண்கள் தியான முகாம்

இடம்: ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரம், சுரண்டை
நாள்: 2024, மே மாதம் 2,3,4 வியாழன், வெள்ளி, சனி

தேவ செய்தி :

**Bro. T.சாம் அற்புதராஜ்**

**Bro. P.D.ஞானப்பிரகாசம்**

**மற்றும் ஐக்கிய ஊழியர்கள்**

ஆண்கள் ஜெபத்துடன் இம்முகாமில் கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

### ஜெப விண்ணப்பங்கள்:

1. ஆண்கள் அநேகர் தடையின்றி கலந்து கொள்ள, அபிஷேகமே முகாமை நடத்திச் செல்ல
2. முகாமிற்கு விரோதமாய்க் கிரியை செய்யும் சாத்தானின் திட்டங்கள் அழிய.
3. ஊழியர்களைத் தேவன் புதுகிருபையுடன் பயன்படுத்த. தேவ ஞானம் கிடைக்க.
6. ஆண்கள் நீண்ட காலம் ஊழியம் செய்யும் கிருபையைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

## நடப்புச் செய்திகள்.

1. நியூசிலாந்து அணியுடனான முதல் டெஸ்டில், ஆஸ்திரேலியா 172 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்று 1–0 என முன்னிலை பெற்றது.
2. அனைத்து சமூக வலைத்தளங்களுக்கும் நிரந்தர தடை விதிக்க கோரி பாகிஸ்தான் செனட் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.
3. வேளாண்விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கக் கோரி டெல்லியை முற்றிகையிடும் போராட்டத்தை விவசாயிகள் நடத்தி வருகின்றனர். அவர்களை பஞ்சாப் – அரியானா எல்லையில் தடுப்புகளை போட்டு போலீஸ் நிறுத்தியுள்ளனர்.
4. காஷ்மீரில் கடந்த 2 நாட்கள் பெய்த கனமழை காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டதால் சுற்றுலா பயணிகள் சிக்கித் தவித்தனர்.
5. இமாச்சல பிரதேசத்தில் உள்ள லாகூல் ஸ்பிட்டியில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. சாலை முழுவதும் அடையாளம் தெரியாத வகையில் அதன் மீது பனி படர்ந்து காணப்படுகிறது.
6. இந்தாண்டு நடைபெற இருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மாகாணமாக வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதில் முன்னாள் அமெரிக்க அதிபர் டிரம்ப் முன்னிலை வகிக்கிறார். இரண்டாவது இடத்தில் முன்னாள் ஐநா தூதரும், முனனாள் தெற்கு கரோலினா ஆளுநருமான நிக்கி ஹாலே உள்ளார்.
7. பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு கடந்த 8ம் தேதி பொதுதேர்தல் நடைபெற்றது. பாகிஸ்தானில் ஆட்சி அமைக்க மொத்தமுள்ள 265 இடங்களில் 133 இடங்களில் வெற்றி பெற வேண்டும். இதில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி 75 இடங்களிலும், வெளியுறவுத்துறை முன்னாள் அமைச்சர் பிலாவல் புட்டோ சர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்றன. இம்ரான்கான் கட்சியை சேர்ந்த சுயேட்சை உறுப்பினர்கள் 101 இடங்களில் வெற்றி பெற்றனர். ஆனால் எந்த கட்சியும் ஆட்சியமைக்க தேவையான இடங்களை பெறவில்லை.
8. மணிப்பூர் மாநிலத்தில் கடந்த ஆண்டு மே 3ம் தேதி இனக்கலவரம் வெடித்தது. இதில் பலியான பலரின் சடலங்களை சூரசந்த்பூரில் ஒரே இடத்தில் அடக்கம் செய்ய பழங்குடியின மக்கள் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 3ம் தேதி ஏற்பாடு செய்திருந்தனர்.
9. காசாவில் பட்டினியால் வாடும் மக்களுக்கு அமெரிக்க விமானப் படை விமானம் மூலம் உணவு பொருட்களை விநியோகித்துள்ளது.

## "உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே..." ரோமர் 1:8

## உலகமெங்கும் ஜெப ஆவி இன்னும் ஊற்றப்பட...

1. ஆதியாகமம் 32:26 அதற்கு அவன், நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். யாக்கோபு ஜெபித்தது போல வைராக்கியமான ஜெப ஆவி உலகமெங்கும் பரவி நல்ல எழுப்புதல் உண்டாகவும், உலகம் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.
2. யாத்திராகமம் 13:22 பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினி ஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப் போகவில்லை. உலகமெங்கும் உள்ள ஜனங்கள் மத்தியில் இப்படிப்பட்ட ஆவிக்குரிய வழி நடத்துதல் உண்டாகவும், ஜனங்கள் விசுவாசத்தில் இன்னும் வளரவும் ஜெபிப்போம்.
3. லேவியராகமம் 8:36 கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் ஆரோனும், அவன் குமாரரும் செய்தார்கள். உலகமெங்கும் தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் தேவ மனிதர்களை தேவன் திரளாய் எழுப்ப ஜெபிப்போம்.
4. எண்ணாகமம் 6:25 கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி உன் மேல் கிருபையாய் இருக்கக்கடவர். உலகமெங்கும் பிறரை இவ்வசனத்தின்படி ஆசீர்வதிக்கிற ஊழியர்களை கர்த்தர் எழுப்பவும், இதனால் உலக சாபங்கள் அழியவும் ஜெபிப்போம்.
5. உபாகமம் 3:22 அவர்களுக்குப் பயப்படீர்களாக. உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் என்று சொன்னான். இப்படியாக ஒருவரையொருவர் திடப்படுத்தும் வார்த்தையை உலகமெங்கும் ஊழியர்கள் கூற ஜெபிப்போம்.
6. யோசுவா 2:24 கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார். உலகமெங்கும் இப்படியாக விசுவாச வார்த்தை கூறும் விசுவாசிகளின் ஊழியத்தில் அற்புதங்கள், அதிசயங்கள் நடக்கவும், தேவ நாமம் மகிமையடையவும் ஜெபிப்போம்.
7. நியாயாதிபதிகள் 6:34 அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினார். கிதியோன் மேல் இறங்கிய பரிசுத்த ஆவியானவர் உலகமெங்கும் உள்ள ஊழிய ஸ்தாபனங்கள் மீது இன்னும் பலமாய் இறங்கி, ஜெப ஆவியாய் மாற ஜெபிப்போம்.
8. ரூத் 1:16 நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன். நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன். ரூத் தன்னுடைய மாமியாரை உறுதியாய் பற்றிக் கொண்டது போல, உலகமெங்கும் உள்ள ஊழியர்கள் கர்த்தரை பற்றிக் கொள்ளவும், இதனால் பெரிய எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.
9. I சாமுவேல் 2:7 கர்த்தர் தரித்திரமடையச் செய்கிறவரும், ஐசுவரியம் அடையச் செய்கிறவருமாய் இருக்கிறார். அன்னாளின் பாடல் எழுப்புதலைக் கொண்டு வந்ததைப் போல, உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் ஆவியில் பாடி மகிழ ஜெபிப்போம்.
10. II சாமுவேல் 7:13 அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். தாவீதுக்கு ஆலயம் பற்றி ஒரு எழுப்புதல் கிடைத்தது போல, உலகமெங்கும் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் தங்கள் எண்ணத்தில் ஒரு மாற்றம் உண்டாக ஜெபிப்போம்.
11. I இராஜாக்கள்3:28 இராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, அவனுக்கு (ராஜாவுக்கு) பயந்தார்கள். தேவ ஞானம் உலகமெங்கும் உள்ள ஊழியர்கள் யாவருக்கும் கிடைக்கவும் ஜெபிப்போம்.
12. IIஇராஜாக்காள் 5:3 அவள் தன் நாச்சியாரைப் பார்த்து, என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாய் இருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கி விடுவார். தெளிவான உபதேசம் சிறு பிள்ளையிடம் காணப்பட்டது போல, உலகமெங்கும் உள்ள ஊழியர்களிடம் இக்கிருபை உண்டாக ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## சாத்தானின் தந்திரங்களை நமக்கு உணர்த்தும் அபிஷேகம் - 135

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,** இயேசுவின் நாமத்தினால் உங்களை அபிஷேகத்துடன் வாழ்த்துகிறேன். நாம் விசுவாசிகளான பின்பு உடனே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம். ஏனென்றால் நாம் அபிஷேகம் பெற்றுக் கொள்ளும் போது சாத்தானின் தந்திரங்களையும், அவனால் வரக்கூடிய மோசங்களையும் நாம் நன்கு அறிய முடியும். அதற்கு அபிஷேகம் மிகவும் தேவை, சாத்தனாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன் அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே என்று I கொரி. 2:11ல் நாம் வாசிக்கின்றோம். என்றைக்கு நாம் விசுவாசத்துடன் ஊழியம் செய்கின்றோமோ அன்று முதல் சாத்தானின் கிரியைகள் நம்மை வேதனைப்படுத்த தொடங்கும். அவைக்கு நாம் பயப்பட வேண்டாம். நமக்குள் அபிஷேகம் இருக்கும் போது அந்த வல்லமையினால் சாத்தானின் தந்திரங்களை நாம் சரியாக புரிய முடியும். சாத்தானின் தந்திரங்கள் வரும் போது, நாம் எப்படி இவைகளை மேற்கொள்ள முடியும் என்று இந்த அபிஷேகப் பகுதியில் தியானிப்போம்.

### 1. ஊக்கமான ஜெபத்தால் பிசாசை நாம் ஜெயிக்க முடியும்: மத்தேயு 12:29

அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படி கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில் அவன் வீட்டை கொள்ளையிடலாம் என்று மத்தேயு 12:29ல் நாம் வாசிக்கின்றோம். இவ்வசனத்தில் பலவான் என்பது சாத்தானைக் குறிக்கின்றது. நாம் எதற்கெல்லாம் ஜெபிக்கிறோமோ அதிலே வல்லமை வெளிப்படவும், சாத்தானின் தந்திரங்கள் அழிக்கப்படும்படி, முதலில் ஜெபித்து, பிசாசின் வல்லமைகளை கட்டி ஜெபிக்கும் போது, ஆவியானவர் வந்து ஆளுகை செய்வதையும் நாம் காண முடியும். குடும்ப ஆசீர்வாதத்திற்காக, ஊழிய ஆசீர்வாதங்களுக்காகவும், தொழில் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிக்கும் போது தடையில்லாமல் ஆவியானவர் கிரியை செய்வார். எனவே ஊக்கமான ஜெபம் பிசாசை வெல்லும்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு, ஓரிடத்தில் ஆண்கள் முகாம் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பம் முதல் நிறைவு வேளை வரை ஒரு குழப்பமில்லாமல் நடந்தது. மிகவும் சந்தோஷப்பட்டு மறுவருடம் முகாமைப் பற்றி திட்டமிட்டிருக்கும் போது, திடிரென்று ஓர் கூச்சல் சப்தம் கேட்டது. யார் என்று விசாரிக்கும்போது, ஒரு பிசாசின் ஆவி ஊழியத்திற்கு விரோதமாய் செயல்பட்டதை உணர்ந்தோம். அன்று தான் நாங்கள் புரிந்து கொண்டோம். பிசாசின் கிரியைகளுக்கு முதலாவது ஜெபிக்கவில்லை என்பதை உணர்ந்து, அன்றிலிருந்து பிசாசின் தந்திரங்களை அழிக்க முதலாவதாக ஜெபித்து தேவனுக்கு மகிமை செலுத்த இந்நாள் வரை தேவன் உதவி செயகிறார். பிசாசின் தந்திரங்களை முதலில் கட்டும் அபிஷேகம் நம் யாவருக்கும் வேண்டும் ஆமென்.

### 2. வேத வசனங்களை தியானித்து, பிசாசை நாம் ஜெயிக்க முடியும்: I தெச. 2:18

ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தேன். சாத்தான் எங்களைத் தடை பண்ணினான் என்று I தெச.2:18ல் நாம் வாசிக்கின்றோம். வேத வசனங்களை நாம் நன்கு தியானிக்கும் போது, நமக்கு யார் மூலமாகத் தடைகள் வருகின்றது என்பதைக் நாம் காண முடியும். மேலே எழுதப்பட்ட வசனம், நம்முடைய பிரயாணங்களில் பிசாசின் மூலம் தடைகள் வருகின்றது என்பதை நாம் அறியமுடியும. ஆனால் முன்கூட்டியே ஜெபிக்கிற ஜெபத்தின் மூலம் தடைகள் நீங்கும்படி கர்த்தர் உதவி செய்வார். இதைப்போல், வேதம் முழுவதும் வாசித்துப் பார்த்து ஏராளமான தடைகள் யார் மூலம் வருகின்றது என்பதை நாம் எளிதாய் புரிந்து கொள்ளும் போது, அந்த குறிப்பிட்ட வசனங்களைச் சொல்லி ஜெயித்துவிடுவோம். அப்போது பிசாசை துரத்துவது நமக்கு எளிய காரியமாய் விளங்கும்.

பிசாசின் தந்திரங்களை அறியவும், அதை மேற்கொள்ளவும், இனி பிசாசு நம் எல்லைக்குள் வராமல் இருக்க பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அதிகம் தேவை. ஒவ்வொரு நாள் ஜெபத்திலும் அபிஷேகம் புதிய புதிய கிருபையோடு எனக்கு வேண்டும் என்றும், நம் வேலை ஸ்தலத்திற்கு வேண்டும் என்றும் அதிகமாய் ஜெபிக்கும் போது, நமக்கு பெரிய வெற்றியைத் தேவன் தருவார். தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் எனறு II தீமோத்தேயு 1:7ல் வாசிக்கின்றோம். இந்த அபிஷேகம் இன்னும் நமக்கு தேவன் தருவார். இந்தக் கடைசிக் காலத்தில் நம்மைச் சுற்றிலும் வித்தியாசமான சூழ்நிலை இருப்பதை நாம் உணருகிறோம். இதற்குக் காரணம் பொல்லாத ஆவியேயாகும். மீண்டும் ஆவியில் நிறைந்து ஜெபிப்போம். தேவன் நம்மோடு கூட இருந்து யாருக்கும் செய்யாத மிகப் பெரிய வெற்றியை நமக்குத் தந்து, நம்மை மட்டுமல்ல, நம்மால் அநேகர் விடுதலையை பெற்றுக்கொள்ள கர்த்தர் நம்மை ஓர் கருவியாகப் பயன்படுத்துவார். அபிஷேகத்தை மட்டும் இழந்து விடக்கூடாது. கர்த்தர் நம் மனவிருப்பத்தை அறிவார். அதை நிறைவேற்றவும் செய்வார். நமது ஐக்கியத்தில் ஆவியின் நிறைவை ஆரம்ப நாட்களிலே தந்ததால், இன்று வரை அபிஷேகம் நமக்கு போதித்து, பல பாடுகள் மத்தியில் நடத்தி வருகின்றது. இன்னும் நடத்தும் என்று விசுவாசிக்கின்றோம். கர்த்தர் நம்மை கடைசிக்கால தீர்க்கர்களாக, அப்போஸ்தலர்களாக இன்னும் பயன்படுத்துவார். அபிஷேகமே அதிக மேன்மையாகும். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

Registrar of Newspapers for India,
Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : March 26,2024
Date of Posting : March 27,2024 Posted at Surandai

# வேதத்தின் மகத்துவங்களில்... சில...

## வாக்குத்தத்தங்களால் நிறைந்த வேதம்

**"பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"** நியாயாதிபதிகள் 6:12

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறுகின்றேன். நாம் தியானிக்கும் வேதாகமம் மகத்துவமான ஒரு புத்தகமாகும். இம்மாதம் நாம் தியானிப்பது, **வாக்குத்தத்தம் நிறைந்த வேதாகமம்** என்பதாகும்.

இஸ்ரவேலர் தேவனுக்குப் பிரியமில்லாமல் வாழும் போது, கர்த்தர் அவர்களை, அவர்களின் எதிரிகளாகிய பெலிஸ்தரிடம் ஒப்புக் கொடுப்பார். பிறகு இஸ்ரவேலர் தங்கள் தவறுகளை உணரும்போது, கர்த்தர் இறங்கி அவர்களை எதிராளிகளின் கையிலிருந்து விடுவித்து ஆசீர்வதிப்பார். இம்மாதம் நாம் தியானிப்பது கிதியோன் என்பவரைப் பற்றியதாகும். இவர் புலம்பலோடு இருக்கும் போது கர்த்தருடைய தூதனானவர் கிதியோனை நோக்கி பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் (நியா.6:12) என்பதாகும். இவ்வார்த்தை ஓர் வாக்குத்தத்த வசனமாகும். இந்த வசனத்தைக் கிதியோன் கேட்டபோது, கிதியோன், ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவைகளெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன். கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்கள் எல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களை கைவிட்டு மீதியானியர் கையில் எங்களை ஒப்புக் கொடுத்தாரே என்று புலம்பலோடு கிதியோன் கூறியதாக வேதம் கூறுகின்றது (நியா.6:13,14). இவ்வாறு புலம்பிய கிதியோன் மீது தேவ ஆவி இறங்கியது. கர்த்தருடைய வசனமும் தெளிவாய் கிடைத்தது. இந்த வாக்குத்தத்தங்களை கிதியோன் நம்பினார். கர்த்தர் இதே கிதியோனைக் கொண்டு, இஸ்ரவேலுக்கு பெரிய ஜெயத்தைக் கட்டளையிட்டார். ஆமென்.

அன்பானவர்களே, நீங்கள் கர்த்தரின் வாக்குத்தத்தம் பெற்று, சில ஆண்டுகள் ஆகியிருக்கலாம், வாக்குத்தத்தம் நிறைவேற முடியாத அளவிற்கு உங்கள் சூழ்நிலைகள் காணப்படலாம். அதனால் நீங்கள் வாக்குத்தத்தத்தை சந்தேகிக்கலாம். இனி கலங்காதிருங்கள், நீங்கள் விசுவாசித்து மறுபடியும் ஜெபிக்கத் தொடங்குங்கள். கர்த்தர் நமக்கு கொடுத்த அவருடைய வாக்கு நிச்சயம் நிறைவேறும். கிதியோனுக்கு வாக்குக் கொடுத்து நிறைவேற்றிய தேவன் நிச்சயம் உங்களுக்கும் செய்து முடிப்பார். வேதம் முழுவதும் வாக்குத்தத்தங்கள் நிறைந்து காணப்படுகிறது. கட்டாயம் உங்கள் குடும்பத்திற்கும், உங்கள் ஊழியத்திற்கும், உங்களுக்கும் தேவன் கொடுத்த வாக்கு உண்மையாகும். விசுவாசத்துடன் காத்திருந்து பெரிய அற்புதங்களை காணப் போகின்றீர்கள். தேவன் உங்களுக்குச் செய்வேன் என்று கூறின வாக்கு நிச்சயமாய் நடக்கும் கலங்க வேண்டாம். விசுவாசமாய் காத்திருங்கள். பெரிய அற்புதங்களை கர்த்தர் உங்கள் குடும்பத்திலும், ஊழியத்திலும் செய்வார். ஆமென்.

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**
14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

To.
Bro/Sis ______
______
______
Pin | | | | | |

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.